# உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப் பண்ணுவேன். யாத் 23 : 27

**என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்து விட்டீர். ஏசா. 38 : 17**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய பாவங்களையெல்லாம் முதுகுக்குப் பின்னாக எறிந்து விட்ட தேவன், இந்த மாதம் கொடுக்கும் வாக்குத்தத்தம், **உன் சத்துருக்கள் எல்லாரையும், முதுகு காட்டப் பண்ணுவேன். –** என்பதாக.

ஆம், பிரியமானவர்களே,

இந்த மாதத்தில் உன்னுடைய சத்துருக்கள் யாவரையும் கர்த்தர் முதுகு காட்டப் பண்ணப்போகிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா ? எத்தனை மகிழ்ச்சியான காரியம்.

**சகோதரி. சாராள் நவரோஜி அவர்கள் பாடுகிறார். .**

சத்துரு தலை கவிழ்ந்தோட நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம் இயேசுவே இன்று காட்டிடுமே
திருப்பாதம் நம்பி வந்தேன். கிருபை நிறை இயேசுவே
தமதன்பை கண்டடைந்தேன், தேவ சமூகத்திலே – என்பதாக.

ஆம், நம்முடைய சத்துருவானவர் தலை கவிழ்ந்து ஓடும்படியாக புதிய கிருபைகளை கர்த்தர் கட்டளையிடுவதற்காக தேவனைத் துதியுங்கள்.

சத்துருவோடு போராடிக்கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே,

எத்தனை நாள் தான் இப்படி போராடிக் கொண்டிருப்பது என அங்கலாய்க்கிறீர்களோ !

**கர்த்தர் சொல்லுகிறார் . . .** உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகுகாட்டப் பண்ணுவேன்.

தேவனை நன்றியுடன் துதிப்போமாக.

சத்துரு எப்படியெல்லாம் உங்களை வேதனைப் படுத்துகிறான் என்று யோசித்துப் பாருங்கள். தாளில் எழுதி வைத்து தேவனுடைய சமூகத்தில் படைத்து, கண்ணீரோடே விசுவாசத்தோடே துதியுங்கள்.

ஒருமுறை தேவனுடைய சமூகத்தில் உங்களைத் தாழ்த்துங்கள். உங்கள் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடத் தீர்மானியுங்கள்.

தேவனுடைய கிருபையையே பிரஸ்தாபப்படுத்துங்கள். உங்கள் சுயசக்தியை, பக்தியை, நம்பாதிருங்கள். கர்த்தருடைய கிருபையை மாத்திரமே சார்ந்திருங்கள்.

**உங்கள் பெலன் குறுகினது** **உன் சுய நீதியில் ஒன்றுமில்லை**
**உன் சுய பரிசுத்தம் அற்பமானது** **உன் தாலந்துகள் குப்பை**

**கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.**

**சங்கீதம் 117 : 2 :** அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது.

**சங்கீதம் 147 : 11 :** தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக் கிறவர்கள் மேல், கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

**நீதி. 3 : 34** : தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.

இவ்வாறாக உன்னைத் தாழ்த்தி கிருபைக்குக் காத்திருக்கும்போது, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனிமேல் உன்னுடைய ஆயுத பெலத்தை நம்ப வேண்டாம். ஞானத்தை நம்பவேண்டாம், பணத்தை நம்பவேண்டாம், படிப்பை நம்பவேண்டாம், பெலத்தை நம்பவேண்டாம்.

கர்த்தருடைய கிருபையையே நம்புவோம். ஸ்தோத்திர ஜெபத்தினாலே கிருபைக்குமேல் கிருபையில் பெருகுவோம்.

**சங். 57 : 3 கூறுகிறது,** என்னை விழுங்கப் பார்க்கிறவன், என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார். தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்.

**உன் சத்துருக்கள் அனைவரையும்**
**முதுகு காட்டப் பண்ணுவேன். ஆமென்.**